# அல்லாஹ்வின் பண்புகளில் கருத்து வேறுபாடு

**கலாநிதி யூ. எல். அஷ்ரப** - ஹதீஸ்துறை விரிவுரையாளர்
(மன்னர் காலித் பல்கலைக்கழகம் ஸவூதி அராபியா)

அல்லாஹ்வின் திருநாமங்கள், பண்புகள் பற்றிய அறிவு ஒவ்வொரு முஸ்லிமுக்கும் முதன்மையானதாகும். குர்ஆன், ஹதீஸ் ஆகிய மூலாதாரங்களில், அல்லாஹ்வைப் பற்றிய நம்பிக்கைக் கோட்பாடுகள், தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றைப் பின்வருமாறு சுருங்கக் கூறலாம்.

1) அல் - இஸ்பாத் (الإثبات) குர்ஆன், ஹதீஸ் என்பவற்றில் கூறப்பட்டுள்ள பண்புகளை வலிந்துரை செய்யாமல், அல்லாஹ்வுக்கு தரிபடுத்தல் வேண்டும்.
2) அத்-தன்ஸீஹ் (التنزيه) அப்பண்புகள் சிருச்டிகளின் தன்மைகளுக்கு ஒப்பாகாதவை என நம்ப வேண்டும் .
3) அத்-தப்வீழ் (التفويض) இறை பண்புகளின் அந்தரங்கமான யதார்த்தங்களை அல்லாஹ் மட்டுமே அறிவான் என நம்புதல்

''ஸலப்'' (السلف) என அழைக்கப்படும் ஸஹாபாக்கள் தாபிஈன்கள் இக்கோட்பாடுகளின் அமைப்பிலேயே தங்களது ஈமானை அமைத்துக் கொண்டார்கள். ஹிஜ்ரி 124ல் மரணித்த ஷாம் நாட்டைச் சேர்ந்த ''ஜ.்த் பின் திர்ஹம் (جعد بن درهم) '' என்பவர் அல்லாஹ் மூஸா (அலை) அவர்களுடன் உரையாடவில்லை. அல்லாஹ் உரையாடுவது பகுத்தறிவு ரீதியாக அசாத்தியமானது என வாதிட்டார். இவர் தான் இறைவனின் தன்மைகளுக்கு வலிந்துரை கொடுக்க வேண்டும் என வாதிடுவோருக்கு முன்னோடியாவார். அல்லாஹ் தனது நாட்டப்படி சுயமாகப் பேசக் கூடியவன், அவனுக்கு பேச்சுக்கு சத்தம், அச்சரங்கள் உள்ளன, அவனது பேச்சை சிருச்டியால் செவிமடுக்க முடியும்.என்பது ஈமானியக் கோட்பாடாகும். இதை மீறியதனால் ஜ.த் சிலுவையில் அறையப்பட்டார்.

''ஸமர்கந்த'' நகரைச் சேர்ந்த ''ஜஹ்ம் பின் ஸப்வான் (جهم بن صفوان)'' என்பவர், இறைவன் எங்கும் நிறைந்தவன் என்ற இந்து மத ஞானத்தை முன்வைத்து இறை பண்புகளை நிராகரித்தார். இவரின் வாதம், அல்லாஹ் ஏழுவானங்களைக் கடந்துள்ள ''அர்ஷ்'' என்ற சிம்மாசனத்தின் மேல் உள்ளான், அவனது அறிவும் ஆற்றலும் தான் எங்கும் வியாபித்திருக்கின்றன, என்ற இஸ்லாமிய கோட்பாட்டிற்கு முரனானதாகும். ஜஹ்மின் இக்கொள்கை, முஸ்லிம்கள் மத்தியில் அத்வைதக் கொள்கை தோன்றுவதற்கு வழிவருத்தது.

ஹிஜ்ரி 100 அளவில் தோன்றிய மு.தஸிலாக்கள் என அழைக்கப்படும் பகுத்தறிவுவாதிகள், அல்லாஹ்வுக்கு திசை இல்லை என்ற கோசத்தை எழுப்பி அவன் அர்சின் மீது உள்ளான் என்பதை நிராகரித்தனர்.

ஹிஜ்ரி 199ல் மாணித்த கூபாவைச் சேர்ந்த ஹிசாம் பின் ஹகம் (هشام بن الحكم) என்பவர், இறைவனுக்கு சடம் உண்டு என்ற வாதத்தை முதன் முதலாக முன்வைத்தார். அவரைத் தொடர்ந்து முகாதில் பின் ஸுலைமான், இப்னு கர்ராம் ஆகியோர் சடவாதத்தைப் பரப்பினர்.

ஹிஜ்ரி 218ல் மரணித்த "பிச்ர் அல் மரீஸி (بشر المريسي)" என்பவர் ஜஹ்ம் பின் ஸப்வானின் கொள்கையைப் பரப்பினார். ஆல்லாஹ்வின் பண்புகளுக்கு வழங்க வேண்டிய வலிந்துரை(التأويل) முறைகளை விரிவாக முன்வைத்தார். ஹிஜ்ரி 230 மரணித்த இமாம் "உஸ்மான் அத்தாரிமி (عثمان الدارمي)" என்பவர் மரீஸியை எதிர்த்து அந்நக்ழ் அலல் மரீஸி (النقض على المريسي) என்ற நூலை எழுதினார்கள். இமாம் ஷாபிஈ(ரஹ்), அவர்களது மாணவர் அப்துல் அஸீஸ் அல் கினானி ஆகியோர் மரீஸியுடன் விவாதித்துள்ளனர்.

ஹிஜ்ரி 240 மரணித்த , பஸ்ராவில் தோன்றிய "இப்னு குல்லாப் (ابن كلاب) என்பவர், அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தினரின் பெரும்பாலான கொள்கைகளுடன் உடன்பாடு உள்ளவராக இருந்தார். அவற்றில் அல்லாஹ் அர்சின் மேல் உள்ளான் என்பதும் ஒன்றாகும். ஆனால் அல்லாஹ்வின் பேச்சு விடயத்தில் முரண்பட்டார். அல்லாஹ்வும் அவனது பேச்சும் ஒன்று தான், அவன் இஷடப்படி பேசுவதில்லை எனக் கூறினார்.

ஹிஜ்ரி 309ல் மரணித்த ஹுஸைன் பின் மன்ஸுர் அல் ஹல்லாஜ் என்பவர் அத்வைதக் கொள்கையைப் பரப்பி நானே இறைவன் எனப் பிரகடனப்படுத்தினார். அதனால் சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டார்.

ஹிஜ்ரி 324ல் மரணித்த, பஸ்ராவில் தோன்றிய அபுல் ஹஸன் அல் அஷ்அரி அவர்கள் 40 வருடங்களாக மு.ஃ.தஸிலாக் கொள்கையில் கழித்துவிட்டு தவ்பாச் செய்து அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தினரின் கொள்கையைத் தழுவினார்கள். ஆனால் அல்லாஹ் கோபம் அடைகின்றான், திருப்தியடைகின்றான் போன்ற இறை பண்புகளுக்கு வலிந்துரை வழங்குபவராக இருந்தார். இது அஷ்அரி அவர்களுடைய இரண்டாவது சிந்தனைக் கட்டமாகும். இக்கட்டத்தில் அல்லாஹ் அர்சின் மேல் உள்ளான் என்பதை வலிந்துரை செய்யவே இல்லை. பின்பு இறை பண்புகளில் எதையுமே வலிந்துரை செய்யாமல் அனைத்தையும் தரிபடுத்தி முற்று முழுதாக அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் உட்பட்டார்கள். இக்கட்டத்தில் தான் அல் இபானா என்ற நூலை எழுதினார்கள்.

பொதுவாகஅஷ்அரி அவர்களின் போக்கைத்தான் அவர்களது மாணவர்களாகிய அபுல் ஹஸன் அல் பாஹிலி (أبو الحسن الباهلي) இப்னு முஜாஹித் அத்தாஇய்யி (ابن مجاهد الطائي) போன்றவர்களும் கடைப்பிடித்தனர். அதே போன்று அவ்விருவர்களின் மாணவராகிய அல் பாகில்லானி (الباقلاني) அவர்களும் அதே போக்கைக் கடைப்பிடித்துள்ளார்கள்.

ஹிஜ்ரி 479ல் மரணித்த இமாமுல் ஹரமைன் முதல் இறை பண்புகளை வலிந்துரை செய்யும் போக்கு தலை தூக்கியது. அவரிடமிருந்து கஸ்ஸாலி அவர்கள் பெற்றார்கள். ஹிஜ்ரி 606ல் மரணித்த பக்ருத்தீன் அர்ராஸி அவர்கள் அஸாஸுத் தக்தீஸ் என்ற நூலின் மூலம் அஷ்அரி சிந்தனைக் கூடத்தில் இறை பண்புகளுக்கு வலிந்துரை வழங்கும் போக்கை ஸ்திரப்படுத்தினார்கள். கஸ்ஸாலி , பக்ருர் ராஸி ஆகியோர்களின் நூற்களைத் தழுவித்தான், இப்றாஹீம் அல்லக்கானி என்பவர் ஜௌஹறதுத் தௌஹீத், பாஜுரி என்பவான்துஹ்பதுல் முரீத், போன்ற நூல்களை எழுதினர். இவை இலங்கையிலும் தென்னிந்தியாவிலுமுள்ள பெரும்பாலான மத்ரஸாக்களில் போதிக்கப்படுகின்றன. பின்னாலுள்ள காலப்பகுதியில் அல்லாஹ் அழகான தோற்றமுள்ளவற்றில் இருக்கின்றான் என்ற கொள்கையும் தோன்றியது. இக்கொள்கையினாலும் சிலா கவருப்பட்டுள்ளனர். அல்லாஹ் மிக அறிந்தவன்.